ஆலையடிவேம்பு பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்
---------------------------------------------------

1. நிதிக்கூற்றுகள்
--------------------

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்
------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல 01 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 15 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 05 திகதி பிரதேச சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
-----------------------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆலையடிவேம்பு பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்
----------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்
------------------------------------------------------------------------------------------------------------------

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 2 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்
---------------------------------

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்
---------------------------------------------

(அ) சபைக்குரிய 04 நிலையான வைப்புக்களுக்கு மீளாய்வாண்டிற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானம் ரூபா 3,374,493 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) களஞ்சியத்தில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 09 வகையான மின்சாரப் பொருள் இருப்புக்களின் பெறுமதி ரூபா 149,190 மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு பெற்றவர்களிடமிருந்து அறவிடப்பட்ட குத்தகைப் பணம் ரூபா 698,400 வருமான கணக்கிற்கு மாற்றப்படாமல் வைப்புக்கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆம் ஆண்டில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட ரூபா.38,000 தொகை 2015 யூன் 16 ஆம் திகதி வரை வருமானக் கணக்கிற்கு மாற்றப்படாமல் வைப்புக் கணக்கில் காணப்படுகின்றது.

(உ) ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 43,153 தொகையான கடன் தவணைப்பணமும் வட்டியும் உரிய கணக்குகளிள் செம்மையாக்கல் செய்யப்படாது வருமானக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

மரணமடைந்த ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 39,900 கடன் மீதியை அவரின் மரணப் பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| காணிகள் மற்றும் கட்டடிடம் | 157,949,871 | காணி உரிமைப்பத்திரங்கள் |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 212,166 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, மற்றும் மெய்மைய்வு அறிக்கைகள |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 1,871,290 | |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 1,390,525 | |
| நூலகப் புத்தகங்கள் | 667,192 | |

1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) IAI/2002/02 அம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | 12 கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான கணனிப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள். | |
| (i) அத்தியாயம் IX இன் பிரிவு 180 | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச்செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும ஓவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iv) அத்தியாயம் X இன் பிரிவு 217 | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப் பிரமாணம் இல. 396 | கடந்த 18 மாதங்களாக மாற்றப்படாது காணப்பட்ட 03 காசோலைகளின் ரூபா 1,580, தொகையை வருமானமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.** நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுகளின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 4,912,891 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 3,523,676 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 1,389,215 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

வருமான சேகரிப்பு செயலாற்றல்

2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றிற்கு வீத வரிகள் அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 ஏனைய வருமானங்கள்

(அ) றோலர் இயந்திர வாடகை வருமானம்

சபைத் தீர்மானத்தின்படி றோலர் இயந்திரங்களுக்காக நாள் வாடகையாக ரூபா7,000 அல்லது இழிவு வடகையாக ரூபா 3,500 தொகை அறவிடப்ப வேண்டிய போதிலும் 06 சந்தர்ப்பர்களில் இழிவு வாடகைத் தொகையை விட குறைந்த கட்டணம் அறவிடப்பட்டமையால் சபைக்கு ரூபா 15,500 வருமான இழப்பு ஏற்படடுள்ளது.

(ஆ) விளம்பரப் பலகைகளுக்கான மற்றும் தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான கட்டண அறவீடு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 03 விளம்பரப் பலகைகளுக்காக மற்றும் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிறுவப்பட்ட 02 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு அறவிடப்படவேண்டிய ரூபா 170,000 தொகையான உரிமைக்கட்டணத்தை கணக்காய்வுத் திகதியான 2015 யூன் 12 வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 நிலுவை வருமானம்

(அ) 1988 முதல் 2012 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகைப் பணமாகிய ரூபா 526,318 தொகையை அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 முதல் 2007ஆம் ஆண்டு வரை நிலுவையாக காணப்பட்ட வியாபார வரி அரசிறைக் கடனாளிகளின் ரூபா 16,680 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபையின் நூல் நிலையத்தில் உள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நீர்வாசிப்பு மாணியைப்பயன்படுத்தி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கியதனால் சபையினால் ரூபா 69,310 வருமானமாக பெறப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு வழங்கிய நீருக்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு நீர் கட்டணமாக ரூபா 101,406 தொகை செலுத்தப்பட்டமையினால் சபைக்கு ரூபா 32,096 இழப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் உறுப்பினர்களினால் 38 கிராம வீதிகளை திருத்தம் செய்வதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்படாதும் கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்படாதும் சபை நிதியிலிருந்து ரூபா 449,600 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 07 உத்தியோகத்கர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 114,573 கூடட்டுத் தொகையான பல்வேறு கடன்கள் 02 வருடங்கள் தொடக்கம் 08 வருடங்களாக அறவிடப்படாதிருந்தன.

(ஈ) கூட்டுப்பசளை தயாரிப்பதற்காகன பிளாஸ்டிக் வாளி ரூபா 499,850 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டது தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்படாமல் இவை கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) பொருள் பெற்றுக்கொண்டமை கலஞ்சிய ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 760 வாளிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அவை விநியோகிக்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு சபையினால் எதுவித ஆவணங்களும் பேணப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுச் செயற்திறனினமை

பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டம்

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் 01/2014 இலக்க சுற்றுநிருபத்துக்கு அமைய ஆலையடிவேம்பு பிரதேச சபையனால் தெரிவு செய்யப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் ரூபா 4,000,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் மேற்கூறிய நிதியைப்பயன்படுத்தி சபையினால் கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாது தர்மசங்கரி விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா, வாகனத் தரிப்பிடம் என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் மேற்கூறிய நிதியைப்பயன்படுத்தி பிரதேச சபையின் 04 உழவு இயந்திர இழுவைப்பெட்டிகள் ரூபா 999,875 தொகைக்கு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இப்பெட்டிகளை திருத்தம் செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆமைச்சினால் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்காக ரூபா4,000,000 வழங்கப்பட்ட போதிலும் அந்நிதியை குறிப்பிட்ட காலத்திற்குள் பயன்படுத்தாமையினால் ரூபா 1,682,149 திருப்பி வழங்கப்பட்டுள்ளது.

3.3 திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம்

2011ஆம் ஆண்டில் UNOPS திட்டத்தினால் கண்ணகிபுரத்தில் அமைக்கப்பட்ட திண்மக் கழிவுகளை மீள் சுழற்சி முறையில் சேதனப் பசளையாக்கும் நிலையமானது அதற்குரிய இயந்திரம் கொள்வனவு செய்யப்படாமையால் நிர்மாணிக்கப்பட்டதிலிருந்து பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) வருமான முகாமைத்துவம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு